**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரக்கோணம்**

முன்னிலை: செல்வி.அ.அமீனா, B.B.A., L.L.B (Hons).,

நீதித்துறை நடுவர் எண். 1 (மு.கூ.பொ),

அரக்கோணம்.

2026ம் ஆண்டு மார்ச் 30ம் நாள் வியாழன்கிழமை

**C.C.No.75/2021**
**(CNR.No.TNRP09-000554-2021)**

அரசுக்காக,
உதவி ஆய்வாளர்,
அரக்கோணம் கிராமிய காவல் நிலையம்,
குற்ற எண்.30/2017. ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. குமார், வயது–30,
த/பெ. தேசன்,
மேட்டு தெரு,
முதூர் காலனி,
அரக்கோணம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

2. ராஜேஸ்வரி, வயது–29,
த/பெ. குமார்,
மேட்டு தெரு,
முதூர் காலனி,
அரக்கோணம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

3. சுசிலா, வயது–49,
த/பெ. கொள்ளாபுரி,
மேட்டு தெரு,
முதூர் காலனி,

அரக்கோணம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

4. கொள்ளாபுரி, வயது–69,
த/பெ. முனியன்,
மேட்டு தெரு,
முதூர் காலனி,
அரக்கோணம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

5. ரமேஷ், வயது–40,
த/பெ. கொள்ளாபுரி,
மேட்டு தெரு,
முதூர் காலனி,
அரக்கோணம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

... எதிரிகள்

இவ்வழக்கு 09.03.2021ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 30.03.2026ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் B.சரளா தேவி அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**தீர்ப்புரை**</u>

05.01.2017ம் தேதி காலை 11.30 மணிக்கு அரக்கோணம் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முதூர் கிராமம், புதிய காலனி மேட்டுத் தெருவில் சாட்சிகள் பார்த்திபன், தாரா ஆகியோர் சாட்சி 1ன் மாமியார் வீட்டிற்கு சென்றிருந்த போது முன்விரோதம் காரணமாக சாட்சி 1யை பார்த்து எதிரியான நீர் ங்கோத்தா தெவிடியா பையா நீ என்ன பெரிய மயிரா என்று அசிங்கமாக பேசி கொம்பால் இடது கன்னத்தின் மீது அடித்து சொய்பகாயம் ஏற்படுத்தினார் என்றும், சாட்சி 2யை பிடித்த கீழே தள்ளி சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், கொலை செய்து விடுவோம் என் மிரட்டியதாகவும் 1ம் எதிரியாகிய உம்மீது இதச பிரிவுகள் 147, 294(b), 323 (2counts), 506(i)–ன் கீழும், 2ம் எதிரியான நீர் கொலை செய்து விடுவோம் என மிரட்டியதாகவும் உம்மீது இதச பிரிவு 147, 506(i)–ன் கீழும், 3,4,5 வது எதிரிகளாகிய நீங்கள் கையால் முதுகின் மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், கொலை செய்து விடுவோம் என மிரட்டியதாக இதச பிரிவு 147, 323, 506(i)ன் கீழ் அரசு தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் அனைத்து நகல்களும் எதிரிகளுக்கு குவிமுச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3.இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 294(b), 323 (2counts), 506(i) கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 147, 506(i)– ன் கீழும், 3வது, 4வது, 5வது எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 323, 506(i) ன் கீழ் முதல் நோக்கு தோன்றியதால் குவிமுச பிரிவு 240–ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எதிரிகள் குற்றத்தினை மறுத்தமையால் குவிமுச பிரிவு 242–ன் படி அரசு தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4.<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் விவரம் பின்வருமாறு</u>:–

அரசுதரப்பில் பட்டியல் சாட்சி–1 முதல் பட்டியல் சாட்சி–7 வரை சாட்சிகள் கொடுக்கப்பட்டு, கூடுதல் சாட்சியாக அரக்கோணம் கிராமிய காவல் நிலைய தலைமை காவலர் ராஜேஷ் பட்டியல் சாட்சி–8 ஆக சேர்க்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.6 வரை விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசுதரப்பில் சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்</u>**:–

(I) 05.01.2017ம் தேதி காலை 11.30 மணிக்கு அரக்கோணம் கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட முதூர் கிராமம், புதிய காலனி மேட்டுத் தெருவில் சாட்சிகள் பார்த்திபன், தாரா ஆகியோர் சாட்சி 1ன் மாமியார் வீட்டிற்கு சென்றிருந்த போது முன்விரோதம் காரணமாக சாட்சி 1யை பார்த்து எதிரியான நீர் ங்கோத்தா தெவிடியா பையா நீ என்ன பெரிய மயிரா என்று அசிங்கமாக பேசி கொம்பால் இடது கன்னத்தின் மீது அடித்து சொய்பகாயம் ஏற்படுத்தினார் என்றும், சாட்சி 2யை பிடித்த கீழே தள்ளி சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், கொலை செய்து விடுவோம் என் மிரட்டியதாக 1ம் எதிரியாகிய உம்மீது இதச பிரிவுகள் 147, 294(b), 323 (2counts), 506(i)–ன் கீழும், 2ம் எதிரியான நீர் கொலை செய்து விடுவோம் என மிரட்டியதாகவும் உம்மீது இதச பிரிவு 147, 506(i)–ன் கீழும், 3,4,5 வது எதிரிகளாகிய நீங்கள் கையால் முதுகின் மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

(ii)அ.சா.1 முதல் அ.சா5 வரை உள்ளவர்கள் உறவினர்கள் ஆவார்கள். 16.01.2017ம் தேதி காலை 8.30 மணிக்கு அரக்கோணம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலின் பேரில் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த பார்த்திபன் த/பெ. பரசுராமன் என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பெற்று, பின் நிலையம் ஆஜராகி அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்

30/2017 இதச பிரிவுகள் 147, 294(b), 323, 506(2) ன் கீழ் அ.சா.ஆ–4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(iii). பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.3 சுப்பிரமணி, அ.சா.4பரசுராமன் என்பவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ 3 மாதிரி வரைபடம், அ.சா.ஆ.4 பார்வை மகஜர் தயார் செய்தார்.

(iv). பிறகு பட்டியல் சாட்சி 1முதல் 7 வரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் கைது நடவடிக்கை எதுவும் எடுக்கபடவில்லை.

(v). பிறகு அ.சா.1 பார்த்திபனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அஜீராவை விசாரணை செய்து அ.சா.1 பார்த்திபனுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என அ.சா.ஆ.7விபத்து பதிவேடுடன் கூடிய காயச் சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார்.

(vi). விசாரணையில் எதிரிகள் மீது முதல் நோக்கு தோன்றியதால் உதவி ஆய்வாளர் ராஜாராம் விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(b) கீழ் வினவிய போது சாட்சிகள் கூறுவது பொய் என்றும் பொய் வழக்கு என்றும் தெரிவித்தார்கள். மேலும் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம்</u>**:–

எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(b), 323, 506(i) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

8. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

9. எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. குற்றவியல் வழக்குகளில் நிரூபிக்கும் சுமையானது அரசு தரப்பினை சார்ந்துள்ளது என்று இ.சா.ச. சட்டப்பிரிவு 101 இன் கீழ் காணப்படுகிறது.

11. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசுதரப்பில், பார்த்திபன் அ.சா.1 ஆகவும், விமல்ராஜ் அ.சா.2 ஆகவும், சுப்பிரமணி அ.சா.3 ஆகவும், பரசுராமன் அ.சா.4 ஆகவும், தாரா அ.சா.5 ஆகவும், ராஜேஷ் (தலைமை காவலர்) அ.சா.6 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் அ.சா.ஆ–1 ஆகவும், பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5, ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், அ.சா.1 பார்த்திபனின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச் சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 பார்த்திபன் தனது முதன்மை சாட்சியத்தில் தான் மூதூரில் வசித்து வருவதாகவும், கடந்த 2017ம் வருடம் பகல் 11.30 மணிக்கு தான் தனது மாமனார் வீட்டில் இருந்த போது தன்னை அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாகவும், அதனை தடுக்க வந்த தனது மனைவி தாராவையும் தாக்கியதாகவும், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்த்கவும்த தற்போது எங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க தனக்கு எந்த ஆட்சேபேனையும் இல்லை என்றும், ஆவணத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், போலீசார் தன்னை விசாரித்தாகவும்

சாட்சியம் அளித்துள்ளார். இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 விமல்ராஜ் தனது சாட்சியத்தில் தான் முதூரில் வசித்து வருவதாகவும், அ.சா.1 பார்த்திபன் தனது மாமா என்றும், பட்டியல் சாட்சி 2 தாரா தனது தங்கை என்றும், கடந்த 2017ம் வருடம் பகல் 11.30 மணிக்கு தனது மாமா மற்றும் தங்கை தாரா எங்களது வீட்டிடம் இருந்தபோது தனது மாமா மற்றும் தங்கையை யாரோ அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாகவும், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்ததாகவும், தற்போது எங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க தனக்கு எந்த ஆட்சேபேனையும் இல்லை என்றும், ஆவணத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், போலீசார் தன்னை விசாரித்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

14. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.3 சுப்பிரமணி தனது சாட்சியத்தில் தான் முதூரில் வசித்து வருவதாகவும், தனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் அரசு

தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

15. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.4 பரசுராமன் தனது சாட்சியத்தில் தான் முதூரில் வசித்து வருவதாகவும், 10 வருடங்களுக்கு முன்பு காலை 10.30 மணிக்கு தான் முதூர் கிராமத்தில் உள்ள புதிய காலனியில் இருந்த போது அங்கு வந்த போலீசார் அ.சா.1 பார்த்திபனுக்கும், எதிரிகளுக்கும் ஏற்பட்ட தகராறு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டுக் கொண்டதன்பேரில் தான் போட்டுக்கொடுத்ததாகவும் தன்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், மேலும் அவர் தனது குறுக்கு விசாரணையில் இந்த வழக்கு பற்றி தனக்கு தெரியாது என்றும், காவல் அதிகாரிகள் கேட்டதன் பேரில்தான் வெற்று தாளில் கையொப்பம் செய்ததாக கூறி அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

16. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.5 தாரா தனது சாட்சியத்தில் தான் முதூரில் வசித்து வருவதாகவும், அ.சா.1 பார்த்திபன் தனது கணவர் என்றும், அ.சா.2 விமல்ராஜ் தனது சகோதர்ர என்றும் 2017ம் வருடம் பகல் 11.30 மணிக்கு தானும், தனது கணவரும் தன் அம்மா வீட்டிடம் இருந்தபோது அங்கு வந்த அடையாளம் தெரியாத நபர்கள் தனது கணவரையும், தன்னையும் தாக்கியதாகவும், சந்தேகத்தின் பேரில்

எதிரிகள் மீது புகார் அளித்த்கவும்த தற்போது எங்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றும், எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க தனக்கு எந்த ஆட்சேபேனையும் இல்லை என்றும், தன்னை போலீசார் விசாரித்தாகவும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

17. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.5 வரை அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் தலைமை காவலர் அ.சா.6 சாட்சியத்தை மட்டுமே வைத்துக் கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாக கருத முடியாது.

18. இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஆராய்ந்து நோக்குமிடத்து இந்த வழக்கில் அரசு தரப்பால் விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிராகவும், எதிரிகள் தன்னை அசிங்கமாக பேசி தாக்கி மிரட்டியதாக அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காததாலும், அ.சா.2 முதல் அ.சா.5 வழக்கின் புகாருக்கோ அல்லது குற்ற இறுதி அறிக்கைக்கோ ஒத்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதாலும், அ.சா.6 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளதால் அவரின் சாட்சியத்தினை மட்டும் வைத்துக் கொண்டு எதிரிகள் குற்றம் புரிந்ததாக கருத இயலாது என்பதாலும் அரசு தரப்பு

வழக்கை உறுதியூட்டும் வகையில் சாட்சிகள் இல்லாததாலும், எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(b), 323, 506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சியம், சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

19.இறுதியாக, மேற்சொன்ன காரணங்களால் எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 147, 294(b), 323, 506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியம், சான்றாவனங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி குற்றவாளி இல்லை என்று குவிமுச 248(1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

20. இந்த வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, எனவே சான்று பொருள் பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணையம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க தட்டச்சர் உடனுக்குடன் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ஆண்டு மார்ச் 30ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1 (FAC),
அரக்கோணம்.

**<u>இணைப்பு</u>:**

1. **<u>அரசுதரப்பு சாட்சிகள் பட்டியல்</u>:**

| | |
|---|---|
| அ.சா.1 | பார்த்திபன் |
| அ.சா.2 | விமல்ராஜ் |
| அ.சா.3 | சுப்பிரமணி |
| அ.சா.4 | பரசுராமன் |
| அ.சா.5 | தாரா |
| அ.சா.6 | ராஜேஷ் ( தலைமை காவலர்) |

2. **<u>அரசுதரப்பு சான்றாவணங்கள் பட்டியல்</u>:**

| **Exhibits** | **Date** | **Description of Documents** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 23.01.2020 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம். |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 | 23.01.2020 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 23.01.2020 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4 | 16.01.2017 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 23.01.2020 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 23.01.2020 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | 23.01.2020 | அ.சா.1 பார்த்திபனின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச் சான்றிதழ் |

3. **அரசுதரப்பில் சான்று பொருள்**: இல்லை.

4. **எதிரிகள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள், சான்று பொருள்:–** இல்லை.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC) ,

அரக்கோணம்.

**<u>நகல்கள்:–</u>**

1.மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், இராணிப்பேட்டை

மாவட்டம்.

2.அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2.

3.காவல் ஆய்வாளர், கிராமிய காவல் நிலையம்.

**<u>குறிப்பு:–</u>**

1. அரசுதரப்பில் சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.
2. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்தார்.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC),
அரக்கோணம்.